29.01.2025

O.S.No.414 of 2019

PW1 திருமதி.மனோன்மணி ( பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை):-

சாட்சி வா.த.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்திருக்கின்றேன் என்ற விவரம் எனக்குத் தெரியும். எனக்கு ஒரே ஒரு மகன் அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. என்னுடைய மகன் இறந்து போய்விட்டதால் அவருடைய சொத்திற்கு நானும், என்னுடைய மருமகளும் வாரிசுதாரர்கள் ஆவோம். என்னுடைய மகன் பெயரில் உள்ள சொத்திற்கு நான் பாகம் கேட்டு இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கின்றேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் என்னுடைய மருமகளுக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது என்றும் என் மகன் இரண்டாவது கணவர் என்று சொல்லியிருக்கின்றேன். என்னுடைய மகனும் ஏற்கனவே திருமணம் ஆகி விவாகரத்து பெற்று பிரதிவாதியை இரண்டாவது திருமணம் செய்தார் என்ற விவரத்தை என்னுடைய பிரமாண பத்திரத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நான் இந்த விசயத்தை வேண்டும் என்றே மறைத்திருக்கின்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய மருமகள் திருமணத்திற்கு முன்பே ஆசிரியராக பணிபுரிந்த சம்பாதித்து வந்த விவரம் எனக்குத் தெரியும். தாவா சொத்தை என்னுடைய மகன், மருமகள் இருவரும் சேர்ந்து அவர்களின் சுய சம்பாதியத்தை கொண்டு என் மகன் பெயரில் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. இந்த சொத்தை என்னுடைய மகன் அவரின் திருமணத்திற்கு 4 ஆண்டுகளுக்கு முன்பாகவே வாங்கினார். இந்த சொத்து திருமணத்திற்கு பின்பு வாங்கிய சொத்து என்பதால் அவர்கள் இருவரும் சேர்ந்து வாங்கிய சொத்து என்று கூறலாமா என்றால் அப்படியும் கொள்ளலாம். என்னிடம் காட்டப்படுகின்ற வா.த.சா.ஆ. 1 கிரைய பத்திரத்தில் கண்டுள்ள சொத்தானது 29.12.2016ல் வாங்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். இந்த சொத்து

சோராஞ்சேரியில் உள்ளது. என்னுடைய மகனுக்கும், 2ம் பிரதிவாதிக்கும் 2012ம் ஆண்டே திருமணம் நடைபெற்றது. 1வது ஐட்ட சொத்தில் என்னுடைய மகனுக்கு அரைப்பங்கு தான் இருக்கினறது என்றாலும் அந்த அரை பாகத்தினைத் தான் நான் கோர முடியும் என்றாலும், நான் வழக்குரையில் கோரியுள்ளபடி 1வது ஐட்ட மொத்த சொத்திலும் பாதி பாகம் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய மகனுக்கும் பிரதிவாதிக்கும் திருணம் ஆன தேதியில் இருந்து அவர்களுடன் தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். என்னுடைய மகன் இறந்த பிறகும் பிரதிவாதியும் நானும் சேர்ந்திருந்தோம். நான் தற்பொழுது அரக்கோணத்தில் உள்ள எனது உறவினரோடு இருந்து வருகின்றேன். பருத்தி பட்டு வீட்டை வாங்கி கட்டுவதற்காக என்னுடைய மருமகள் ரூ.25 லட்சம் லோன் எடுத்து அவ்வீடு கட்டப்பட்டது என்றால் அது தவறு. பில்டர்ஸிடம் இருந்து 1000 சதுர அடி வீடு வாங்கப்பட்டு பின்பு ஊரில் இருந்த எனது சொத்தை விற்று மேலும் இரண்டு தளங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டது. நான் சொல்லுகின்ற இந்த விவரத்தை எனது வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஊரில் என்னுடைய வீட்டை விற்று எனக்கு பணம் வந்தது என்று காட்டக்கூடிய ஆவணம் எதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் மேற்சொன்ன விவரத்தை நான் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இப்படியெல்லாம் நடக்கும் என்று நினைக்கவில்லை. வழக்குரையில் சொல்லப்பட்ட 2வது ஐட்ட சொத்து திருநின்றவூரில் இருக்கின்றது. இந்த சொத்து காலி நிலம். இந்த சொத்தை என்னுடைய மகன் வாங்கிய பிறகு இன்றைய தேதி வரை என்னுடைய மகன் பெயரில் தான் இருக்கின்றது. 2009ல் இந்த சொத்தினை வாங்கும் அளவிற்கு என்னுடைய மகனுக்கு வருமானம் இருந்ததா என்றால், என்னுடைய மகன் ஆசிரியராக வேலை பார்த்தார். என்னுடைய மகள் சந்தோஷசவுந்தரி, சவுதியில் வேலைபார்த்து அனுப்பிய பணத்தை வைத்து இந்த சொத்து வாங்கப்பட்டது. அவ்வாறு என்னுடைய மகள் சவுதியில் இருந்து பணம் அனுப்பியதை காட்டக்கூடிய ஆவணம் எதனையும் நான் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். திருநின்றவூரில் உள்ள இடம் முழு பணத்தையும் கொடுத்து வாங்கப்பட்டது. திருநின்றவூரில் உள்ள சொத்தில் தான் பிரதிவாதி தற்பொழுது குடியிருந்து வருகின்றார். நான் தாக்கல் செய்துள்ள என்னுடைய பிரமாணபத்திரத்தில் பிரதிவாதி தற்பொழுது குடியிருந்து வரும் வீட்டை என்னுடைய மகள் சந்தோஷசவுந்தரியின் நகையை வைத்து கட்டப்பட்டது என்று சொல்லியிருக்கின்றேன். இதனை நிருபிக்க ஆவணம் எதனையும் நான் தாக்கல் செய்யவில்லை. ஆனால் நகை தற்பொழுதும் அடமானத்தில் தான் உள்ளது. நான் பொய் சொல்வதால் தான் அடமானத்தை காட்டக்கூடிய ஆவணம் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த நகையை என் மகனே தான் வங்கியில் அடமானம் வைத்திருக்கின்றார். அந்த நகை 20 சவரண். நான் சொல்லுகின்ற நகை அடமானம் எனது மகன், பிரதிவாதியை திருணம் செய்த பிறகு தான் வைக்கப்பட்ட அடமானம். நான் என்னுடைய வழக்குரையில் 10 சவரண் நகை பிரதிவாதியிடம் இருக்கின்றது என்ற சொல்லியிருக்கின்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரம் பத்தி 6ல் என்னுடைய மகன் ஊறாண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தையும், 10 சவரண் நகையும் வைத்திருந்தார் என்று சொல்லியிருக்கின்றேன் என்றால் சரிதான். 2வது ஐட்ட சொத்தில் பிரதிவாதி அவருடைய பணத்தை வைத்து தான் வீட்டை கட்டினார் என்றாலும், நான் சொல்வதைப்போல் என்னுடைய மகனின் நகையை வைத்து வீட்டை கட்டவில்லை என்றாலும் சரியல்ல. 2வது ஐட்ட சொத்து திருநின்றவூரில் உள்ள சொத்து என்னுடைய மகனால் காலி மனையாக வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் அந்த காலி மனையில் மட்டுமே நான் அரை பங்கு கோர முடியும் என்றாலும், கட்டப்பட்ட வீட்டில் எந்த பங்கும் கோர முடியாது என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கின்ற வழக்குரையில் பிரதிவாதியிடம் இருந்து நகை மற்றும் பணத்தை கேட்டு பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல. கேட்டிருக்கின்றேன். நான் வழக்கரையில் சொல்லியிருக்கின்ற கார் கடனில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

(அறிவார்ந்த பிரதிவாதித் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு

விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது)